தினதந்தி 16/04/2019.

## தமிழகத்தில் 19-ந் தேதி வெளியாக உள்ள

# பிளஸ்-2 தேர்வு முடிவு தேதி மாற்றப்படுமா?

ஈரோடு, ஏப்.16–

தமிழகத்தில் வருகிற 19–ந் தேதி வெளியாக உள்ள பிளஸ்–2 தேர்வு முடிவு தேதி மாற்றப்படுமா? என்ற எதிர்பார்ப்பு எழுந்து உள்ளது.

### எதிர்பார்ப்பு

தமிழகம் முழுவதும் கடந்த மார்ச் மாதம் பிளஸ்–2 பொதுத்தேர்வுகள் நிறைவடைந்தன. இதற்கான தேர்வு முடிவுகள் வருகிற 19–ந் தேதி வெளியிடப்படும் என்று கல்வித்துறை அறிவித்து உள்ளது.

ஏற்கனவே கடந்த ஆண்டு பொதுத்தேர்வு முடிவுகள் வெளியிட்டபோது, பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் இந்த ஆண்டுக்கான தேர்வு முடிவு தேதியையும் அறிவித்தார். அதன்படி இந்த ஆண்டு தேர்வு முடிவுகள் வெளியிடுவதற்கான ஆயத்த பணிகளை பள்ளிக்கல்வித்துறை அதிகாரிகள் எடுத்து வருகிறார்கள்.

முதல் கட்டமாக பிளஸ்–2 பொதுத்தேர்வு விடைத்தாள்கள் அனைத்தும் திருத்தப்பட்டு மதிப்பெண்கள் பட்டியல் தயார் செய்யப்பட்டு வருகிறது.

இந்த நிலையில் பிளஸ்–2 தேர்வு முடிவுகள் வெளியிடும் தேதி தள்ளி வைக்கப்படுமா? என்ற எதிர்பார்ப்பு எழுந்து உள்ளது.

### தேர்தல்

ஏன் என்றால் வருகிற 18–ந் தேதி தமிழகம்–புதுச்சேரியில் நாடாளுமன்ற பொதுத்தேர்தல் நடக்கிறது. அதற்கு அடுத்த நாளான 19–ந் தேதி தேர்வு முடிவுகள் அறிவிக்கப்பட உள்ளன. அன்று புனித வெள்ளி தினம் கடைபிடிக்கப்படுகிறது. இது அரசு விடுமுறை தினமாக உள்ளது.

அதுமட்டுமின்றி பொதுத்தேர்தல் பணியில் வாக்குச்சாவடி அதிகாரிகளாக பணியாற்றுபவர்கள் ஆசிரியர்கள்தான்.

17–ந் தேதி பிற்பகல் தொடங்கி 18–ந் தேதி நள்ளிரவையும் தாண்டி அவர்கள் தேர்தல் பணியில் ஈடுபட வேண்டியது உள்ளது. அதற்கு பின்னர் மறுநாள் காலையில் தேர்வு முடிவுகள் வெளியிடும்போது பள்ளிக்கூடத்துக்கு வருவது என்பது மிகவும் சிரமமாகும்.

தற்போது தேர்வு முடிவுகள் அனைத்தையும் செல்போன்களிலேயே பார்க்கும் வசதி இருந்தாலும்; பள்ளிக்கூடங்களில் தேர்வு முடிவுகள் ஒட்டப்படுவது வழக்கம். அதுமட்டுமின்றி தேர்வு முடிவுகள் வெளியான உடனேயே பள்ளி மற்றும் கல்லூரிகளில் மாணவர் சேர்க்கையும் தொடங்கும். இந்த நிலையில் தேர்தல், அரசு விடுமுறை என்று தொடர் நிகழ்வுகள் இருப்பதால் பிளஸ்–2 பொதுத்தேர்வு முடிவு வெளியீடு ஆசிரியர்கள் மற்றும் மாணவ–மாணவிகளுக்கு சுமையாகவே இருக்கும் என்று சமூக ஆர்வலர்கள் கருதுகிறார்கள்.

### கோரிக்கை

இதுகுறித்து கல்வித்துறை அதிகாரி ஒருவர் கூறும்போது, கடந்த 10 நாட்களுக்கும் மேலாக பள்ளிக்கல்வித்துறை அதிகாரிகள் மற்றும் ஆசிரிய–ஆசிரியைகள் தேர்தல் பணியில் ஈடுபட்டு இருக்கிறோம். தேர்தல் முடிந்து பதிவு செய்யப்பட்ட மின்னணு வாக்குப்பதிவு எந்திரங்கள் சேகரிக்கப்படும் வரை அனைவரும் வாக்குச்சாவடிகளில் இருக்க வேண்டும்.

இந்த ஆண்டு மாலை 6 மணிவரை வாக்குப்பதிவு நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டு இருப்பதால் மின்னணு வாக்குப்பதிவு எந்திரங்களை சேகரிக்கும் நேரம் இன்னும் அதிகரிக்கலாம். பல்வேறு இடங்களுக்கும் பணிக்கு சென்று விட்டு அடுத்தநாள் பள்ளிக்கூடத்துக்கு செல்வது என்பது சாத்தியமில்லாதது. எனவே பிளஸ்–2 பொதுத்தேர்வு முடிவு வெளியிடும் தேதி மாற்றப்படும் என்று எதிர்பார்க்கிறோம்.

அதிகாரிகள் இதை பரிசீலனை செய்து உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறோம் என்றார்.